1984 மார்ச் 12]

தாலுகா அலுவலகங்களிலிருந்து பெறப்படும் சிட்டா அடங்கல்கள் மற்றும் நகல்கள்.

271—(*வினா எண் 21702)—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுகா அலுவலகங்களில் சிட்டா அடங்கல்கள் மற்றும் தேவையான நகல்கள் பெற வேண்டுமானால் கால தாமதமாவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைப் போக்கவும் உடனுக்குடன் நகல்கள் கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): வட்ட அலுவலகங்களிலே சிட்டா அடங்கல்கள் மற்றும் தேவையான நகல்கள் காலதாமதமாக கொடுப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படி வந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த இடத்தில் அப்படி காலதாமதம் என்று குறிப்பிடாத காரணத்தால் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இப்படி கால தாமதத்தை தவிர்க்க வேண்டுமென்றும், எப்படி எப்படி கொடுக்கவேண்டுமென்றும், அறிக்கைகள் பெறப் பெற்று, அறிக்கையிலே நிம்மதி அடையாவிட்டால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறோம்.

பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

272—(*வினா எண் 5522)—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து கலிங்கியம், கொளப்பலூர், அயலூர், கெட்டிசெயூர், தாழ்குனி, கோசனம், சிறுவலூர், திங்களூர், ஊத்துக்குளி வரையிலும் குடிதண்ணீர் எடுப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. மதிப்பீட்டுத் தொகை இன்னும் முடிவாகவில்லை.